கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தில் வழிவகை இல்லை என்று சொல்லியிருக்கின்றோம். அதைப் பின்பற்றியாக வேண்டும். ஆகையால், அந்த சொசைட்டிக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்றால் ஏற்கெனவே சொன்னதுபோல சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தோ, பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தோ கட்ட வேண்டும் அல்லது அந்த சொசைட்டி நடத்துகின்ற சொசைட்டியின்மூலமாக அதில் வரும் இலாபத்தைக் கொண்டுதான் கட்ட வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.லோ. ரமேஷ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

26—

சிப்காட் தொழிற்பேட்டை

***8932—திரு. கா.லோ. ரமேஷ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில், தற்போது ராணிப்பேட்டையில் 1,421 ஏக்கர் பரப்பளவில் 3 சிப்காட் தொழிற்பேட்டைகள் உள்ளன. மேலும், அதனை நான்காம்கட்ட விரிவாக்கம் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே, திருப்பத்தூரில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லையென்றாலுங்கூட, தொழில் முனைவோரின் தேவைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தமிழகத்தின் அரசியல் வீதியில் அறிவுத் தேரோட்டும் அறிவு பொக்கிஷம், இன்பத் தமிழ்நாட்டின் வஞ்சிக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைக்கு இரவென்றும், பகலென்றும் பாராமல், கண் துஞ்சாமல் கடமையாற்றுகின்ற கர்மயோகி, இன்றைய தமிழகம் தென்றலின் தெருவில் அமைதியின் மடியில் தவழ்ந்து அனைத்து மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் தருகின்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது திருப்பத்தூர் தொகுதி முற்றிலும் விவசாயத்தை நம்பியிருக்கின்ற தொகுதியாகும். 30,000 மலைவாழ் மக்கள் வாழ்கின்ற இந்தத் தொகுதியில் படித்த இளைஞர்கள், ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு, ஏழை மக்களுக்காக வாழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு தொழிற்சாலைகளைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, வேலூர் மாவட்டத்திற்கென்று 3 வட்டங்களைத் தேர்வு செய்து, 8,000 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அதிலும் தொழிற்பேட்டைகளைக் கொண்டு வர வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல திருப்பத்தூருக்கு அருகில் இருக்கின்ற பர்கூர் 60 கிலோ மீட்டர்தான். அங்கே இன்னும் இடம் இருக்கின்றது. தொழில் முனைவோர் யாராவது வருவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அங்கே இடம் ஒதுக்கித் தரப்படும் என்பதைத்

தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோக, அந்தப் பகுதியிலே தொழில் முனைவோர்கள் அதிகமாக இருப்பார்களென்று சொன்னால், நிச்சயமாக அந்த இடத்திலேயும் ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ்.கே. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

தரம் உயர்த்துதல்

14086—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குளச்சல், திங்கள் நகர் போக்குவரத்துப் பணிமனைகளைப் புதுப்பித்து தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு 260 பணிமனைகளை மேம்படுத்துவதற்கு 3 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நிதியினைக் கொடுத்து போக்குவரத்துக் கழகத்தினுடைய பணிமனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. குளச்சல் அரசுப்